குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.196/2017

2021-ம் ஆண்டு நவம்பர் 16 செவ்வாய்கிழமை அரசு/புகார்தாரர்/எதிரி தரப்பு சாட்சியாகிய 1-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.கலைச்செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் : திரு. குமார் வயது : 47

த/பெ : ராமசாமி தொழில் :

ஊர் : சமயம் :

வட்டம் : ஜாதி :

மாவட்டம்:

முதல் விசாரணை .

நான் மானத்தாள் கரட்டூரில் குடியிருக்கிறேன். நான் எஸ்.என்.பி.பேருந்தில் டி.என்.30 ஏ.டபல்யூ1200 என்ற எண் கொண்டது அதில் நடத்துனராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 11.8.2014-ம் தேதி மாலை 4.49 மணிக்கு மேற்சொன்ன பேருந்தில் நடத்துனராக பணியில் இருந்தேன். அந்த பேருந்து தருமபுரியில் இருந்து சேலம் நோக்கி செல்வது. அதில் ஆஜர் எதிரிகளில் ஒருவரான குமார் என்னிடம் அக்ரஉறாரத்திற்கு செல்வதற்காக பயண சீட்டு கேட்டார். நேரம் இன்மையால் பேருந்து அங்கு நிற்காது என்று கூறினேன். அவரே என்னிடம் பூசாரிப்பட்டிக்கு பயண சீட்டு பெற்று கொண்டார். அப்போது அவர் போதையில் இருந்தார். அவர் தகாத வார்த்தைகளால் திட்டினார். பேருந்து 5.45 மணியளவில் தீவட்டிப்பட்டி வந்த போது ஆஜர் எதிதிகளில் மற்றவர்கள் அக்ராஉறாரம் பகுதியில்பேருந்தை வழிமறித்து பேருந்தில் ஏறி ஆஜர் எதிரி குமாரின் தம்பி சாட்சியால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. அவர் கையை மடக்கி எனது வலது பக்க கண்ணில் குத்தினார். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. சாட்சி காயத்தின் தழும்பை அடையாளம் காட்டினார். அப்போது ஆஜர் எதிரிகளில் மல்லிகாவை அடையாளம் காட்டி பெயர் தெரியாது என்று கூறி அவர் தன்னை செருப்பால் எனது முகத்தின் மீது அடித்தும் ஏண்டா தேவடியா பையா பஸ்ஸை நிறுத்த மாட்டியா என்று தகாத வார்த்தையால் திட்டினார். வண்டியை நிறுத்தி விட்டு நான் புகார் கொடுக்கலாம் என்று இறங்கி விட்டேன். நான் உடனே திவட்டிப்பட்டி காவல் நிலையம் சென்றேன். அவர்கள் எனக்கு அடிப்பட்டிருப்பதால் மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினார்கள். அடுத்த நாள் காலை 8.00 மணியளவில் சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் தான் நான் கொடுத்த புகார் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகாரை நானே எழுதினேன். புகாரினை பெற்று கொண்ட போலீசார் என்னிடம் விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரிகள் பொதுமக்கள் முன்னிலையில் என்னை அடித்ததால் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டது. அந்த புகார் அ.த.சா.ஆ.1 ஆகும்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

தாசசமுத்திரம் அக்ரஉறாரம் பஸ் ஸடாப்பில் பஸ்ஸை நிறுத்த வேண்டி ஊர்காரர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.மேற்படி பஸ் ஸ்டாப் பிரச்சினை சம்மந்தமாக ஊர்மக்களும், பஸ் உரிமையாளர்களும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தகராறு நடந்ததால் பஸ்ஸை நிறுத்தி விட்டேன். தேசிய நெடுங்சாலையில் நிறுத்தவில்லை ஓரமாக தான் நிறுத்தினேன். ஒரு 10 நிமிடங்கள் பஸ்

நிறுத்தப்பட்டது. பிறகு 10 நிமிடங்களில் நான் போலீசாரை அழைத்து வந்தேன். பஸ் ஸ்டாப்பில் இருந்த கடைக்காரர்களை போலீசார் விசாரித்தார்கள். கடைக்காரர்கள் அனைவருமே தெரியாது என்று பதில் கூறிவிட்டார்கள். என்னை அடித்தவர்கள் கிழக்குபக்கமாக தாசசமுத்திரம் நோக்கி ஓடி விட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் நான் கூறிய வாக்குமூலத்தை எழுதி கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். அதன் பிறகு சம்பவ இடத்திற்கு என்னை அழைத்து கொண்டு வந்து விசாரித்து விட்டு என்னை மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். என் புகார் மற்றும் வாக்குமூலத்தில் குமார் போதையில் வண்டியில் ஏறினார் என்று நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் நான் கூறினேன். குமார் பூசாரிப்பட்டிக்கு டிக்கெட் வாங்கினார் என்ற விவரத்தை என்னுடைய புகார் மற்றும் போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை தகராறு சமயத்தில் தான் நான் முதன் முதலில் பார்க்கிறேன் என்றால் சரிதான். எனவே எதிரிகளை எனக்கு தெரியாது. யார் கூறி எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்று பெயரும் அடையாளமும் யாரும் எனக்கு கூறவில்லை. எதிரிகளின் பெயர் மற்றும் விலாசம் யார் எனக்கு கூறினார்கள் என்ற விவரம் என்னால் கூறஇயலாது. அ.த.சா.ஆ.1 னை எனது கைப்பட எழுதினேன். புகாரில் இரண்டு இடங்களில் (5 மணிக்கு மற்றும் கேட்டு என்று மேற்குறிப்பு செய்யப்பட்டு திருத்தப்பட்டுள்ளது அதை நான் தான் எழுதினேன்)பேருந்தின் ஓட்டுநர் மற்றும் பயிற்சி நடத்துனரை போலீசார் விசாரித்தார்கள். போலீசார் இருவரையும் தனித்தனியே விசாரித்து கையொப்பம் பெற்றனர். முதலில் பஸ்ஸில் என்னை அடித்தார்கள். பிறகு கீழே இறக்கி அடித்தார்கள். எதிரிகள் அடித்ததில் கண்ணின் அருகில் ஒரு காயம் மட்டுமே ஏற்பட்டது. அது ரத்தகாயம் ஆகும். அது ரத்தகாயம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மாலை 6.30 மணிக்கு நான் மருத்துவமனை சென்றேன். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக இல்லை. பிறகு என்னை காவல் நிலையத்திற்கு அனுப்பி விட்டார்கள். காவல் நிலையத்தில் 1/2 மணிநேரம் இருந்தேன். என்னை, ஓட்டுநர் மற்றும் பயிற்சி நடத்துனரை புகார் கொடுத்த அன்று காலை 8.00 மணிக்கு விசாரித்தார்கள். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அதன் பிறகு அக்ரஉறாரம் பஸ் ஸ்டாப்பிற்கு நான் செல்லவில்லை. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், ஊர்காரர்களுக்கும், சேலம் மாவட்ட பஸ் உரிமையாளர் சங்கத்திற்கும் இடையே உள்ள பிரச்சினை சம்மந்தமாக ஊர்ஜனங்களை மிரட்டவேண்டும் என்பதற்காக என் முதலாளி சொல்லி பொய்யாக இவ்வழக்கு என்னை பயன்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை. இல்லை.

ஓம்/- குமார்

ஓம்/-M.A. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),
ஓமலூர்.